**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.253/2020 [CNR No.TNMD240003972020]</u>**

1) சின்னன் ……..வாதி

/ எதிர் /

1) காமேஷ்வரி (எ) சத்தியா
2) மைனர். பிரஸ்திகா
3) மைனர். ஜெயவிஷ்ணு
4) அன்னலட்சுமி .......பிரதிவாதிகள்

**(2, 3 பிரதிவாதிகள் இளவர் என்பதால் அவரது தாயாரும், இயற்கை பாதுகாவலருமான 1–ம் பிரதிவாதி மூலம்)**

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 18.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குபேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஜக்கையன் அவர்கள் முன்னிலையாகியும், 4–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும்

சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## தீர்ப்புரை

வாதிக்கு பிரதிவாதிகள் பிராது தொகை ரூ.4,78,650/-உடன் அதன்பின்பு, வழக்கு தாக்கல் செய்த நாள் முதல், தீர்ப்பாணை நாள்வரை 12% வருட வட்டியும், அதன் பின்னிட்டு தொகை வசூலாகும் நாள்வரை 6% பின் வருட வட்டியும் சேர்ந்து இறந்து போன பாலமுருகன் சொத்திலிருந்து பிரதிவாதிகள் திரும்ப செலுத்த உத்தரவிடக் கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**2) வழக்குரையின் சுருக்கம்:-**

i) 1-ம் பிரதிவாதி இறந்து போன பாலமுருகன் அவர்களின் மனைவி ஆவார். 2, 3 பிரதிவாதிகள் இறந்து போன பாலமுருகன் அவர்களின் குழந்தைகள் ஆவார்கள். 4-ம் பிரதிவாதி இறந்து போன பாலமுருகன் அவர்களின் தாய் ஆவார். மேற்படி பாலமுருகன் கடந்த 01.11.2020 தேதி இறந்து விட்டார். இறந்து போன பாலமுருகன் என்பவர் வாதியிடம் கடந்த 28.05.2020-ம் தேதி குடும்ப சில்லறை கடன்களை தீர்ப்பதற்காக ரூ.4,50,000/- கடனாக கேட்டுள்ளார். அன்றைய தினமே வாதி இறந்து போன பாலமுருகனுக்கு ரொக்கமாக ரூ.4,50,000/- கொடுத்துள்ளார். மேற்படி கடன் தொகைக்கு சாட்சிகள் முன்பு ரூ.100/-க்கு வட்டி ரூ.1% வீதம் அசலும், வட்டியும் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு புரோநோட் ஒன்று எழுதிக்கொடுத்துள்ளார்.

ii) அடுத்ததாக, இறந்து போன பாலமுருகன் பணம் கடனாக பெற்றுக்கொண்ட நாள் முதல் அசலோ, வட்டியோ திரும்ப செலுத்தவில்லை. இந்நிலையில் பாலமுருகன் கடநத 01.11.2020–ம் தேதி 1 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். பிரதிவாதிகள் இறந்துபோன பாலமுருகனின் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள். பிரதிவாதிகளிடம் வாதி அவர்களது தந்தை பெற்ற கடனை திரும்ப கேட்ட போது திரும்ப செலுத்த முன்வரவில்லை. எனவே, இறந்துபோன பாலமுருகனின் வாரிசுகளிடமிருந்து மேற்படி கடன் மற்றும் வட்டி தொகையை பெற்றுத்தரக் கோரி வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:–</u>

i) தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. உண்மைக்கு புறம்பானது ஆகும். 1–ம் பிரதிவாதிக்கும் பாலமுருகனுக்கும் திருமணம் ஆகிய காலத்தில் இருந்து சிறுசிறு சண்டைகள் ஏற்பட்டு 1–ம் பிரதிவாதி அவரது பெற்றோர்கள் வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார். 1–ம் பிரதிவாதியின் கணவர் பாலமுருகன் என்பவர் 4–ம் பிரதிவாதியின் மகன் ஆவார். 4–ம் பிரதிவாதியும், பாலமுருகனும் ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளார்கள். இந்நிலையில், வாதி மற்றும் பல நபர்கள் பாலமுருகன் இறந்த உடனே பாலமுருகனின் வாரிசுகளான பிரதிவாதிகளை உசிலம்பட்டி துணை கண்காணிப்பாளரிடம் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு, விசாரணையின் முடிவில் மேற்படி புரோநோட்டில்

பாலமுருகனின் கையெழுத்து போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என விசாரணை முடிக்கப்பட்டது. வாதிக்கும், பாலமுருகனுக்கும் எந்த தொடர்பும் இல்லை. வாதி பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, தாவா வழக்கை தள்ளுபடி செய்யக் கோரி 1–ம் பிரதிவாதியால் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) 4–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:–**

i) பாலமுருகனுக்கும், வாதிக்கும் எந்த உறவும் இல்லை. 4–ம் பிரதிவாதி மகன் பாலமுருகன் உயிரோடு இருந்த காலத்தில் வாதியுடன் பழக்கம் இருந்திருக்க வாய்ப்பில்லை. 4–ம் பிரதிவாதி பாலமுருகனுடன் வாதியை எப்போதும் எந்த காலத்திலும் சேர்ந்து பார்த்தது கிடையாது. மேற்படி பாலமுருகன் காசோலை மட்டும் நெல் கொள்முதல் செய்தவர்களுக்கு கொடுப்பது வழக்கம். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் பாலமுருகன் ஒருபோதும் கையொப்பமிட்டு கொடுக்கவில்லை. 4–ம் பிரதிவாதியின் மகன் பாலமுருகன் உசிலம்பட்டியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வாடிக்கையாளராக இருந்து வரவு செலவு செய்து சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். மேற்படி பாலமுருகன் 4–ம் பிரதிவாதியின் 6 பவுன் தங்க நகையையும், அவரது சின்னமாவுக்கு சொந்தமான 10 பவுன் தங்க செயின், அவரது மனைவிக்கு சொந்தமா 7 பவுன் தங்க செயினையும் அடமானம் வைத்துள்ளார். மேற்படி நகைகள் குறித்து 1–ம் பிரதிவாதிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதனால், மேற்படி

வங்கிக்கு மேற்படி அடமானம் நகைகளை மீட்க பணம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, 4–ம் பிரதிவாதிக்கு பொறுப்புள்ள சூழ்நிலை இருப்பதால் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்ட புரோநோட்டை வைத்து வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என 4–ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5)** இவ்வழக்கின் வழக்குரை, எதிர் வழக்குரை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு வழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாண கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the Promissory note dated 28.05.2020 is true, valid and suppported by consideration?
2. Whether the plaintiff is entitled for recovery of money?
3. To what other relief that the plaintiff is entitled for?

**6)** வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>7) எழுவினாக்கள் 1 மற்றும் 2–க்கான தீர்வு:–</u>**

1. 28.05.2020–ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு மறுபயனுக்காக வாதிக்கு கொடுக்கப்பட்டதா?
2. வாதி கோரும் அடமான கடன் தொகை பிரதிவாதிகளிடமிருந்து வட்டியுடன் திரும்ப கிடைக்கத்தக்கதா?

i) முதலாவதாக, தாவா வழக்கில் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்தார். சர்ச்சைக்குரிய புரோநோட் 28.05.2020–ம்

தேதியிட்டதாகும். அதை வா.சா.1 ஆக குறியீடு செய்தார். அவர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 1–ம் பிரதிவாதி இறந்துபோன பாலமுருகனின் மனைவி ஆவார். 2, 3 பிரதிவாதிகள் இறந்து போன பாலமுருகனின் வாரிசுகள் ஆவார்கள். 4–ம் பிரதிவாதி இறந்துபோன பாலமுருகனின் தாய் ஆவார். பாலமுருகன் கடந்த 01.11.2020–ம் தேதி உடல்நலக் குறைவால் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு குடும்ப செலவிற்காக கடந்த 25.05.2020–ம் தேதி வாதியிடம் ரூ.4,50,000/– கடனாக பெற்றார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக இறந்து போன பாலமுருகன் ரூ.100/– க்கு ரூ.1 வீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு புரோநோட் எழுதிக்கொடுத்தார் என்பதாகும். இதுசம்பந்தமாக, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.1 புரோநோட்டை இறந்து போன பாலமுருகன் வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை. புரோநோட்டில் உள்ள கையொப்பம் பாலமுருகன் கையொப்பம் இல்லை என்பதாகும். இதுசம்பந்தமாக, கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது, வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **நான் TNSTC–ல் டிரைவராக பணிபுரிகிறேன். வா.சா.ஆ.1–ன் படி கொடுத்த பணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் நான் விவசாயம் செய்வதற்கான நெல் மூட்டைகள் வாங்க வைத்திருந்த பணமாகும். நான் நெல் வியாபாரி கிடையாது. நெல் மூட்டைகளை இருப்பு வைத்து விற்பனை செய்வேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி எனது சொந்தக்காரர் என்றால் சரியல்ல. பாலமுருகனுக்கு 4–ம் பிரதிவாதி**

**நேரடி வாரிசு இல்லையென்பதால் மேற்படி பணத்திற்கு அவர் பொறுப்பானவர் அல்ல என்றால் சரியல்ல** என வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும் போது, வாதிக்கு, பாலமுருகனுக்கு பணம் கொடுப்பதற்கு போதுமான வசதி இல்லை என்பதாகும். இதுசம்பந்தமாக, வாதி தனக்கு போதுமான வசதி இருக்கிறது என சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால் பிரதிவாதிகள் தரப்பில், பாலமுருகனின் கையெழுத்து வா.சா.ஆ.1 புரோநோட்டில் இல்லை என மறுத்து குறுக்கு விசாரணை செய்வதோடு பிரதிவாதிகளின் கடமை முடிந்துவிட்டதாக கருதமுடியாது.

ii) அடுத்ததாக, வாதி தரப்பில் புரோநோட்டில் உள்ள சாட்சி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் பாலமுருகன் கடந்த 28.05.2020–ம் தேதி வாதியிடம் ரூ.4,50,000/– கடன் பெற்றதாகவும், அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 புரோநோட் எழுதிக் கொடுத்ததாகவும், வா.சா.2 முதலாவது சாட்சி கையெழுத்து செய்ததாகவும், வா.சா.ஆ.1 புரோநோட்டை உறுதிபடுத்தியிருக்கிறார். ஆக, வா.சா.ஆ.1 புரோநோட்டில் பாலமுருகனின் கையெழுத்து இல்லை என்பதை பிரதிவாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டர்வர்கள் ஆவார்கள்.

iii) அடுத்ததாக, பிரதிவாதிகள் தரப்பில் போதுமான வாய்ப்பு வழங்கியும் அவர்கள் வாய்மொழி சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. வா.சா.ஆ.1 புரோநோட்டில் பாலமுருகனின் கையெழுத்து இல்லை என்பதை நிருபிக்க வேண்டிய சுமை பிரதிவாதிகளை சேர்ந்தது ஆகும். பிரதிவாதிகள் வாதியை

குறுக்கு விசாரணை செய்வதோடு தங்களுடைய கடமை முடிந்துவிட்டதாக கருதுவது ஏற்புடையது அல்ல. வாதி வா.சா.ஆ.1 புரோநோட்டை சாட்சிகள் மூலம் மெய்பித்துள்ளார். ஆகவே, 28.05.2020–ம் தேதியிட்ட புரோநோட் இறந்துபோன பாலமுருகன் வாதியிடம் ரூ.4,50,000/– பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார். வாதியிடம் பாலமுருகன் வாங்கிய கடன் தொகையை அவரது வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என எழுவினாக்கள் 1 மற்றும் 2 தீர்மானிக்கப்படுகிறது.

**8) எழுவினா 3–க்கான தீர்வு:–**

3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ பிராது தொகை ரூ.4,78,650/–ஐ வாதிக்கு திரும்ப செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் கடன் தொகை ரூ.4,50,000/–க்கு பிராது தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை வருட 9% வட்டியும், தீர்ப்பு தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை வருட 6% வட்டியும் வாதிக்கு பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ திரும்ப செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருகெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.27 18:12:53 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி:–**

வா.சா.1 சின்னன்

வா.சா.2 ராஜ்திலக் மற்றும் தன்னப்பன் **(3–ம் தரப்பினர்கள்)**

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.05.2020 | கடனுறுதி சீட்டு |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–**

**–– இல்லை ––**

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.27 18:13:02 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அசல் வழக்கு எண். 253 / 2020

வரைவு / சீரான / தீர்ப்புரை

நாள்:– 27.03.2025.